**C.C. No. 256/2019** நாள் : *03.12.2019*

*அ.சா.1 திருமதி. சித்ரா*

**முதல் விசாரணை**

நான் தருமபுரி தா.குளியனுாரில் குடியிருந்து வருகிறேன். கட்டிட வேலைக்கு சென்று வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 13.04.2019ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ராதா, ஜெயகாந்தி, நடுப்பிள்ளை, சரோஜா, உண்ணாமலை, கிருஷ்ணன், கலா மற்றும் சிலரும் ஏரியூருக்கு கட்டிட வேலைக்கு செல்வதற்காக பொலிரோ பிக்கப் வாகனம் ஒன்றில் எங்கள் ஊரில் இருந்து புறப்பட்டுச் சென்றோம். அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த வாகனத்தை ஆஜர் 1ம் எதிரி ஓட்டி வந்தார். வாகனமானது தருமபுரி - பென்னாகரம் ரோட்டில் அன்னை சத்யா நகரில் உள்ள எஸ்.ஆர். பெட்ரோல் பங்க் எதிரில் காலை சுமார் 07.00 மணியளவில் பென்னாகரம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தபோது 1ம் எதிரி அந்த வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்று ரோட்டின் இடதுபுறம் கவிழ்த்து விபத்தை ஏற்படுத்திவிட்டார். அந்த விபத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன், கலா ஆகியோருக்கு பலத்த அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனக்கு வலது கால் மற்றும் நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. சரோஜா என்பவருக்கு வலது கால் மற்றும் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உண்ணாமலை என்பவருக்கு வலது பக்க தோள்பட்டையில் நரம்பில் அடிப்பட்டுவிட்டது. ஜெயகாந்தி என்பவருக்கு இடுப்பில் அடிப்பட்டுவிட்டது. நடுப்பிள்ளை என்பவருக்கு நெற்றியில் அடிப்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது. சாலா என்பவருக்கு இடதுபுற தோள்பட்டையில் அடிப்பட்டுவிட்டது. ராதா என்பவருக்கு வலது காலில் அடிப்பட்டுவிட்டது. சரண்யா என்பவருக்கு வலது முழங்கைக்கு கீழே அடிப்பட்டுவிட்டது. அடிப்பட்ட எங்களை ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது தருமபுரி நகர போலீசார் என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மறுவிசாரணை** இல்லை.

**C.C. No. 256/2019** நாள் : *03.12.2019*

அ.சா.*2* திருமதி. உண்ணாமலை

<u>**முதல் விசாரணை**</u>

நான் தருமபுரி தா.குளியனூாரில் குடியிருந்து வருகிறேன். கட்டிட வேலைக்கு சென்று வருகிறேன். ஆஜர் *1*ம் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த *13.04.2019*ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த சாலா, ராதா, ஜெயகாந்தி, சரண்யா, சரோஜா, சித்ரா, கிருஷ்ணன், கலா மற்றும் சிலரும் ஏரியூருக்கு கட்டிட வேலைக்கு செல்வதற்காக பொலிரோ பிக்கப் வாகனம் ஒன்றில் எங்கள் ஊரில் இருந்து புறப்பட்டுச் சென்றோம். அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த வாகனத்தை ஆஜர் *1*ம் எதிரி ஓட்டி வந்தார். வாகனமானது தருமபுரி - பென்னாகரம் ரோட்டில் அன்னை சத்யா நகரில் உள்ள எஸ்.ஆர். பெட்ரோல் பங்க் எதிரில் காலை சுமார் 07.30 மணியளவில் பென்னாகரம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தபோது *1*ம் எதிரி அந்த வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்று ரோட்டின் இடதுபுறம் கவிழ்த்து விபத்தை ஏற்படுத்திவிட்டார். அந்த விபத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன், கலா ஆகியோருக்கு பலத்த அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனக்கு வலது பக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. தலையில் அடிப்பட்டுவிட்டது. அ.சா.*1* சித்ரா என்பவருக்கு வலது கால் மற்றும் நெற்றியில் அடிப்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. ராதா என்பவருக்கு வலது காலில் அடிப்பட்டுவிட்டது. சரண்யா என்பவருக்கு வலது முழங்கைக்கு கீழே அடிப்பட்டுவிட்டது. சரோஜா என்பவருக்கு வலது கால் மற்றும் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஜெயகாந்தி என்பவருக்கு இடுப்பில் அடிப்பட்டுவிட்டது. சாலா என்பவருக்கு இடதுபுற தோள்பட்டையில் அடிப்பட்டுவிட்டது. அடிப்பட்ட எங்களை ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது தருமபுரி நகர போலீசார் அ.சா.*1*யை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை

<u>**மறுவிசாரணை**</u> இல்லை.